DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 43 /2025 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | கண்ணன் |
| Father's /Husband Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | நெம்மேலி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 50 |
| Occupation | : | கோவில் காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21st day May 2025.
Accused present.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:-**

அடிப்பட்டவுடன் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னை மருத்துவர் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். மருத்துவரிடம் எத்தனை நபர்கள் தாக்கியதாக கூறினேன் என்றால் ஒரு நபர் தாக்கியதாக கூறினேன். போலிசார் என்னிடம் எப்போது வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சம்பவம் நடந்து 4 நாட்களுக்கு பிறகும் வாங்கினார்கள். நான் அதில் கையொப்பம் செய்தேனா என்றால் எதிரி அடித்ததில் கையில் அடிப்பட்டு கட்டுப்போட்டிருந்த காரணத்தினால் கையொப்பம் செய்ய இயலாமல் ரேகை தான் வைக்க இயன்றது. எனது புகார் வாக்குமூலத்தில் சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் மனோகருக்கு தெரியும் என்று கூறினேன். சம்பவத்திற்கு என்ன முன்விரோதம் என்றால் நான் எதிரியின் அம்மாவிற்கு கழிப்பறை கட்டுவதற்கு உதவி செய்ததை எதிரி பகையாக கொண்டு என்னை தாக்கினார். எதிரி அவரது அம்மாவிற்கு மகன் என்று இருக்கும்போது நான் ஏன் உதவி செய்தேன் என்றால் எதிரி அவரது அம்மாவிற்கு உணவு கூட வழங்காமல் திறந்த வெளியில் இயற்கை உபாதைகளை செய்ய வைத்து கஷ்டப்படுத்தியதால் நான் உதவி செய்தேன். எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. தீபாவளி, பொங்கல் நாளுங்கிழமைகள் கூட மது அருந்தமாட்டேனா என்றால் அருந்தமாட்டேன். எனது வீட்டிற்கு மேற்கே எதிரியின் அம்மா வீடு அமைந்துள்ளது. எதிரியின் வீடும் அதே திசையில் தான்

அமைந்துள்ளது. நான் எதற்காக எதிரியின் அம்மாவிடம் பேசுகிறேன் என்றால் எதிரியின் அம்மா எனது வீட்டிற்கு வெளியே வந்து அமர்ந்து ஓய்வெடுப்பார் அப்போது பேசுவேன். நான் எதிரியின் அம்மாவுடன் தகாத உறவுமுறையில் இருந்தேன் என்றால் சரியல்ல (சாட்சி கோபமடைந்து எதிரியின் தாயார் வயதில் முதிர்ந்தவர் என்றும் அக்கா போன்றவர் என்றும் வருத்தத்துடன் கூறுகிறார்). எதிரி என்னை கண்டித்தார் என்றால் சரியல்ல. நான் பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல எதிரி அடித்ததில் தான் காயம் ஏற்பட்டது. தற்போது மேலும் பிரச்சனை செய்து வருகிறார். நான் பொய் புகார் அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.21 03:45:27 +0530